**கவனிக்க.-** 2024.03.28 ஆந் திகதிய 2378 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி VI இன் ஆங்கிலப் பிரதியில் வெளியிடப்பட்ட மிருக வைத்தியர்களினதும் வைத்திய அலுவலர்களினதும் பெயர்ப்பட்டியலில் பதிவுத் திகதி 2020.07.02 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது 2024.03.01 என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2380 - 2024 අප්‍රේල් මස 10 වැනි බදාදා - 2024.04.10

*2380 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 496 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** அல்- பலாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## நீர்கொழும்பு மாநகர சபை

*கால்நடைகளை வெட்டும் கட்டளைச் சட்டத்தின் (272) அதிகாரத்தின் கீழ் எதிர்ப்பு தெரிவித்தல்.*

*நீர்கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை நிறைவேற்றும் கடமைகளை புரிகின்ற நீர்கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் டப்ளியூ. ஏ.டி. பிரபாத் லக்ஷ்மன் ஆகிய நான், நீர்கொழும்பு மாநகர சபை கட்டளை சட்டத்தின் 286(அ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2024 ஆம் ஆண்டிற்காக இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சி வியாபாரம் நடாத்தி செல்வதற்காக என்னிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளமையால் அதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்குவதில் நீர்கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் வசிப்பவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்களாயின் அவர்கள் எந்த காரணத்திற்காக எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதனை எழுத்துமூலம் 02 பிரதிகளுடனான அறிவித்தலை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் மாநகர சபை ஆணையாளர் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதை கால்நடைகளை வெட்டும் கட்டளை சட்டத்தின் (272) வது அதிகாரத்தின் 7 (2) பிரிவின் கீழ் நான் தீர்மானம் எடுத்துள்ளேன்.*

*டப்ளியூ.ஏ.டி.பிரபாத் லக்ஷ்மன்,*
*மாநகர ஆணையாளர்,*
*மாநகர சபை,*
*நீர்கொழும்பு.*

*நீர்கொழும்பு மாநகர சபை காரியாலயத்தில்,*
*2024 மார்ச்சு 27.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர | - | எஸ்.எம.கே. அன்டகி ரொஷான் |
| இறைச்சிக் கடையை நடாத்த உத்தேசிக்கும் இடம் | - | இல. 70, மயான வீதி, குடாபாடு |
| வியாபாதைத்தின் தன்மை | - | மாட்டிறைச்சி மற்றும் பன்றியிறைச்சி வியாபாரம் |

*04-168*

---

## நீர்கொழும்பு மாநகர சபை

*கால்நடைகளை வெட்டும் கட்டளைச் சட்டத்தின் (272) அதிகாரத்தின் கீழ் எதிர்ப்பு தெரிவித்தல்*

*நீர்கொழுமபு மாநகர சபையின் அதிகாரத்தை நிறைவேற்றும் கடமைகளை புரிகின்ற நீர்கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் டப்ளியூ. ஏ. டி. பிரபாத் லக்ஷ்மன் ஆகிய நான் நீர்கொழும்பு மாநகர சபை கட்டளை சட்டத்தின் 286(அ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2024 ஆம் ஆண்டிற்காக இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி விற்கும் வியாபாரம் நடாத்தி செல்வதற்காக என்னிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளமையால் அதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்குவதில் நீர்கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் வசிப்பவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்களாயின் அவர்கள் எந்த காரணத்திற்காக எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதனை எழுத்துமூலமாக 02 பிரதிளுடனான அறிவித்தலை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பதிவு தபால் மூலம் மாநகர சபை ஆணையாளர் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதை கால்நடைகளை வெட்டும் கட்டளை சட்டத்தின் (272) வது அதிகாரத்தின் 7 (2) பிரிவின் கீழ் நான் தீர்மானம் எடுத்துள்ளேன்.*

*டப்ளியூ. ஏ. டி. பிரபாத் லக்ஷ்மன்,*
*மாநகர ஆணையாளர்,*
*நீர்கொழும்பு மா நகர சபை.*

*நீர்கொழும்பு மா நகர சபை அலுவலகம்.*
*2024 மார்ச்சு 27.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | - | மொஹமட் ஹலம் மொஹமட் மொஹிதீன் |
| இறைச்சிக் கடையை நடாத்த உத்தேசிக்கும் இடம் | - | இல. 38, வின்திரின் மாவத்தை, நீர்கொழும்பு |
| வியாபாரதின் தன்மை | - | மாட்டிறைச்சி வியாபாரம் |

*04-172*

---

**கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை**

*கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் செயலாளர் ஜே. ஏ. எஸ். உதயசிரி ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆவது பிரிவின் விதிமுறைகளுக்கிணங்க 2024 ஆம் வருடம் பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி இல. 2024/02/05/35 இன் கீழ் பின்வரும் தீர்மானம் என்னால் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கின்றேன்.*

ஜே. ஏ. எஸ். உதயசிரி,
செயலாளர்,
கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை.

*கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை அலுவலகம்,
2024 பெப்புருவரி 05.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் 1 ஆவது உப பிரிவின் மூலமாக கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தியடைந்த பிரதேசத்திற்குள் அமைந்திருக்கும் கட்டிடம் காணிகள், வீடுகள், போன்ற அசையாச் சொத்துகளுக்கு 2024 ஆம் வருடத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடு 2024 ஆம் வருடத்திற்காக ஏற்றுக் கொள்வதற்கும்,*

*அந்த ஏற்பாட்டினடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அச்சொத்துக்கள் மீதான மேல்குறிப்பிடப்படும் வருடாந்த மதிப்பில் நூற்றுக்கு 3% வரிப்பணம் விதித்து அறவிடப்படல் வேண்டும் என செயலாளராகிய நான் தீர்மானிக்கின்றேன்.*

*மேலும் 2024 ஆம் வருடத்திற்காக விதிக்கப்படும் அந்த வரிப்பணம் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவுறும் காலாண்டுகளில் சமனான நான்கு தவணைகளில் கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், மேலும் தீர்மானிப்பதுடன் 2024 ஆம் வருடத்திற்கான பூரண வரிப்பணக் கட்டணமானது 2024 ஆம் வருடத்தின் சனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்படுமெனின் பூரண வரிப்பணத் தொகையில் 10% கழிவும் ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரிப்பணம் அந்த ஒவ்வொரு காலாண்டின் முதல் மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு நெருங்கிய தினங்களில் செலுத்தப்படுமெனின் அந்த காலாண்டின் வரிப்பணத் தொகையில் 5% கழிவும் பெற்றுக் கொடுப்பதற்கு நான் தீர்மானிக்கின்றேன்.*

*04-241*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.